செய்தி வெளியீடு எண்: 190 நாள்: 13.03.2018

**செய்தி வெளியீடு**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் முன்னிலையில் இன்று (13.3.2018) தலைமைச் செயலகத்தில், தமிழ்நாட்டின் மீன்வளம் மற்றும் நீர்வாழ் உயிரின வளர்ப்பு மேம்பாட்டிற்காக தமிழ்நாடு அரசிற்கும் ஆஸ்திரேலிய வர்த்தகம் மற்றும் முதலீட்டு ஆணையத்திற்கும் இடையே கையெழுத்திடப்பட்ட ஒருங்கிணைந்த செயல்பாட்டு ஏற்பாடு பரிமாறப்பட்டது.

கடலோர மாநிலமான தமிழ்நாடு 1076 கி.மீ நீளமுள்ள கடற்கரையையும், 13 கடலோர மாவட்டங்களையும் மற்றும் 9.94 லட்சம் மீனவர்களையும் கொண்டுள்ளது, இம்மீனவர்கள் மீன்பிடித் தொழில் மற்றும் மீன்பிடித் தொழில் சார்ந்த இதர தொழில்களையும் தங்கள் வாழ்வாதாரமாக கொண்டுள்ளனர். மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் வழியில் செயல்படும் தமிழ்நாடு அரசு, தமிழ்நாடு மீன்வளத் துறையை சர்வதேச அளவில், வளர்ந்த நாடுகளுக்கு இணையாக மேம்படுத்திட பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

அந்த வகையில், தமிழ்நாடு அரசு, ஆஸ்திரேலிய வர்த்தகம் மற்றும் முதலீட்டு ஆணையத்துடன் ஒருங்கிணைந்து தமிழ்நாட்டில் மீன்வளம் மற்றும் நீர்வாழ் உயிரின வளர்ப்பு மேம்பாட்டிற்காகவும் மீன்உற்பத்தியினை பெருக்கிடவும், நிலைத்த நீடித்த மீன்வளத்தினை உறுதி செய்திடவும், மீன்வள ஏற்றுமதியை அதிகரிக்கவும், ஒருங்கிணைந்த செயல்பாட்டு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்த ஒருங்கிணைந்த செயல்பாட்டு ஏற்பாட்டின் மூலம், மீன்வளம் மற்றும் நீர்வாழ் உயிரின வளர்ப்பு மேலாண்மையில் சிறந்த செயல்பாடுகளை பின்பற்றுதல், மீன்வளக் கொள்கை, ஆராய்ச்சி, உபகரணங்கள், தொழில்நுட்பம், சேவைகள் ஆகியவற்றில் தமிழ்நாடு அரசும், ஆஸ்திரேலிய வர்த்தகம் மற்றும் முதலீட்டு ஆணையமும் ஒருங்கிணைந்து செயல்பட்டு, தமிழ்நாட்டின் மீன்வளத்தினை மேம்படுத்தும். இதன்மூலம், தமிழகத்தில் உற்பத்தியாகும் கடல் உணவினை உலகளாவிய அளவில் சிறப்பாக சந்தைப்படுத்துதல் மற்றும் அதற்கான ஆலோசனை வழங்குதல், மதிப்பு கூட்டப்பட்ட மீன்உற்பத்தி, மீன்வள தகவல்கள் மற்றும் தரவுகள் பரிமாறுதல் ஆகிய

சேவைகள் மூலம் நிலைத்த நீடித்த மீன்வள மேலாண்மையை தமிழ்நாட்டில் ஏற்படுத்திட இயலும்.

இந்த ஒருங்கிணைந்த செயல்பாட்டு ஏற்பாடானது, புதிய தகவல், கல்வி மற்றும் பயிற்சி மூலம் கிராமப்புற மீனவர்களின் திறன் மேம்பாட்டிற்கும், தமிழ்நாடு டாக்டர் ஜெ. ஜெயலலிதா மீன்வளப் பல்கலைக்கழகம் மற்றும் ஆஸ்திரேலியாவிலுள்ள பல்கலைக்கழகங்களிடையே அறிவுசார் பரிமாற்றம் ஏற்படுத்திடவும் உதவியாக இருக்கும். அதுமட்டுமின்றி ஊடகங்கள் மூலமாகவும், கருத்துப் பட்டறைகள் மூலமாகவும் விழிப்புணர்வு ஏற்படுத்திட வழிவகை செய்யப்படும். இதன்மூலம், தமிழ்நாடு மீன்வள முன்னேற்றத்தில் ஒரு புதிய சகாப்தத்தை ஏற்படுத்திட இது வழிகோலும்.

இந்த ஒருங்கிணைந்த செயல்பாட்டு ஏற்பாடு, தமிழ்நாடு அரசின் சார்பில் கால்நடை பராமரிப்பு பால்வளம் மற்றும் மீன்வளத்துறையின் முதன்மைச் செயலாளர் டாக்டர் கே.கோபால், இ.ஆ.ப., அவர்களாலும், ஆஸ்திரேலிய வர்த்தகம் மற்றும் முதலீட்டு ஆணையத்தின் சார்பில் அதன் ஆணையர் திரு.முனிஷ் ஷர்மா அவர்களாலும் கையெழுத்திடப்பட்டு பரிமாறப்பட்டது.

இந்த நிகழ்ச்சியில், மாண்புமிகு மீன்வளம், பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத்துறை அமைச்சர் திரு.டி.ஜெயக்குமார், தலைமைச் செயலாளர் முனைவர் கிரிஜா வைத்தியநாதன், இ.ஆ.ப., நிதித்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திரு.க. சண்முகம், இ.ஆ.ப., கால்நடை பராமரிப்பு, பால்வளம் மற்றும் மீன்வளத் துறை முதன்மைச் செயலாளர் டாக்டர் கே. கோபால், இ.ஆ.ப., மீன்வளத் துறை இயக்குநர் டாக்டர் கீ.சு. சமீரன், இ.ஆ.ப., ஆஸ்திரேலிய வர்த்தகம் மற்றும் முதலீட்டிற்கான அமைச்சர் திருமதி லியோனி மல்டூன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டார்கள்.

* * * * *

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9
நாள்: 13.3.2018